செ. கு. எண்: 322 நாள் :07.12.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 7.12.2013

சென்னை பெருநகரக் காவல், மெரினா காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.சேகர் அவர்கள் 2.11.2013 அன்று காமராஜர் சாலை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.சிவக்குமார் அவர்கள் 3.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.பழனிவேல் அவர்கள் 6.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சிவசங்கரன் அவர்கள் 8.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், சிட்லபாக்கம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.முத்துலிங்கம் அவர்கள் 8.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ராஜேஷ்கண்ணன் அவர்கள் 8.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.ரவிச்சந்திரன் அவர்கள் 8.11.2013 அன்று மறவப்பட்டி கிராமம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 9.11.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.லட்சுமிநாராயணன் அவர்கள் 16.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.பெருமாள்சாமி அவர்கள் 14.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பாலு அவர்கள் 16.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.ராமு அவர்கள் 17.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சிவசங்கரன், ரவிச்சந்திரன், லட்சுமிநாராயணன், பெருமாள்சாமி; தலைமைக் காவலர்கள் சிவக்குமார், பழனிவேல், பாலு; இரண்டாம் நிலைக் காவலர்கள் சேகர், முத்துலிங்கம், முதல்நிலைக் காவலர்கள் ராஜேஷ்கண்ணன் மற்றும் ராமு ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9